17. கண்ணனை எவ்வளவோ வேண்டிய பின், தான் வருவதாகக் கூறி, பின் கொஞ்சமும் இரக்க மில்லாதவராய் இருப்பதால் தான் அவர் வரவில்லை என்று கூறின தோழிக்கு, நம்முடைய கடமையைச் செய்தால் நடக்கிறபடி நடக்கட்டும். மேலும் வஞ்சகனாயும், சபலசித்தனாயும் கண்ணன் இருந்தால் நமக்கு முற்றிலும் தகாதவர் தானே! என்று கூறுகிறாள் ராதை.

இக்காரணமே தனக்கு கவலை அளிப்பதாயும், கண்ணனுக்கு எவ்வளவோ நாயகிகள் இருப்பதால், அவர்களுடன் ஆனந்தமாக பொழுதைக் கழிக்கின்றானோ என்று கூறிய தோழிக்கு, அழகும், குணமும் மிக்க கண்ணனை யாரால்தான் காதலிக்காமல் இருக்கமுடியும்? மேலும் அவரை வேண்டி, ஆசை மிகக்கொண்டு வலுவிலே மேலே விழும் பெண்களை எப்படி உதாசீனம் செய்யமுடியும்? புண்ணியம் செய்த பாக்யசாலிகள் அவரோடு அனுபவிக்கட்டும். துன்பம் அனுபவிக்கவே தான் பிறந்ததால் வருந்த வேண்டிருக்கிறது என்று நிந்திப்பது போல் கண்ணனை துதிக்கிறாள் ராதை.

இராகம் : புன்னாகராளி தாளம் : ஆதி

ஆ : நி ஸ ரி க ம ப த நி 8-வது மேளகர்த்தாவின்

அ : நி த ப ம க ரி ஸ நி ஜன்யம்

**பல்லவி**

யார் மீதும் குற்றம் சொல்லாதே - உன்
கடமையைச் செய்தால் மட்டும் போதும் (யார்)

**அனுபல்லவி**

கார் மேக வண்ணன் கண்ணன் கல்யாண குணசீலனைக்
காதலிக்காமல் இருக்க யாரால் முடியும் (யார்)

**சரணம்**

கிட்ட வரும் பெண்களை எட்டித்தள்ள முடியுமோ
கிருஷ்ணன் தான் என்ன செய்வான்
மட்டில்லா துன்பம்தன்னை அனுபவிக்கப் பிறந்தேன்
மகிழ்ச்சியாக இருக்கும் பாக்யசாலி யாரோ (யார்)

**பல்லவி**

| $I_4$ | O | O |
|---|---|---|
| ; , ஸரி கா ரி ஸா, ரிஸ நிஸநி | ஸா ; ஸாரீ | ஸரி காமக காகா |
| யா ர் மீதும் குற் றம், சொல் | லா . . | தே ... . உன் |
| ; , ரிக மபா பா பா, தபா | ப ம மா; ம க | ரீ ஸா; |
| கடமையைச் செய்தால் மட்டும் | போ . . . . | தும் . |
| ; , - | | |
| . (யார்) | | |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , மா மா ம மா மா தப மக | ரீ ரிக மாம | பப பா, த தா |
| கார்மே க வண்ணன் கண்ணன் | . கல் யா ண | குண சீ ல னை |
| பா , ரீரி ரீரீ ரிஸ ஸ ரிகா | ; , ரிக ம பா | பம மக கரி ஸா |
| . காதலிக் காமல் இருக்க. | யா . ரா ல் | மு. டி. . . யும் |
| ; , - | | |
| . (யார்) | | |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , ஸரி கரி ஸஸா, ரி ஸாஸா | ரிஸ நி ஸரி காரி | ஸா,ரி ஸரி காமக |
| கிட்ட வரும் பெண்களை எட் | டி .. தள் ளமு | டியு மே . . . . |
| கா , மாம தப மகரி ரிகம பத | பத ம பா ; , | ; ; ; ; |
| . கிருஷ்ணன் தா ..ன் என்னசெய் | . . வான் | |
| ; , மா மமா பா, பதா பா | ; , மப தப ப | மம ககரி ஸா, |
| மட்டில்லா துன்பம் தன்னை | அனுபவிக்க | .ப்பி. றந் தேன் |
| ; , ஸரி கரீ ஸா, ஸஸ ஸரிஸ | நீ, ஸா பமா | பம மகரீ ஸா |
| மகிழ்ச்சியாக. இருக் கும் | . பா க்ய சா | லி . . .யாரோ |
| ; , - | | |
| . (யார்) | | |